வாரியம் கருதுகிறது. தற்போது இருக்கின்ற நிலைமைகளைச் சமாளிக்கின்ற வகையில் குடிநீர் வடிகால் வாரியம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபோது ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம் கூட லூர் பகுதியிலே அமல்படுத்தப் போவதாக சொன்னார்கள். அதற்குத் தடையாக பெரும் தேயிலை தோட்டத்திற்கு அதிபதியாக இருக்கக்கூடிய பிர்லா நிறுவன தேயிலை தோட்டம் வழியாக குடிநீர்க் குழாய்களை கொண்டு போகக்கூடாது என்று தடை வாங்கியிருப்பதாகச் சொல்கின்றார்கள். அது அரசுக்குத் தெரியுமா? அந்தத் தடையை நீக்கி அந்தப் பகுதி வாழ் மக்களுடைய குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், தடுக்கப்பட்டிருக்கின்ற விவரங்கள் தற்போது என்னிடம் இல்லை.

செங்கோட்டை நகருக்கு ஹரிஹரா நதி படுகையிலிருந்து தண்ணீர்.

391—(* வினா எண் 11898) **திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை நகர் தண்ணீர் திட்டத்திற்கு ஹரிஹரா நதி படுகையிலிருந்து நீர் எடுக்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை அரசு எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆம். ஹரிஹரா நதி அருகில் இருந்து செங்கோட்டை குடிநீர் திட்டத்திற்கு நீர் எடுப்பதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆனால், இந்நதி, திட்டத்திற்கான தலைப்பிடம் அமைப்பதற்கு ஏற்றதாக இல்லாத காரணத்தால் மாற்று தலைப்பிடம் தேர்வு செய்யப்பட ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1987 ஏப்ரல் 11]

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றை போல இந்த ஹரிஹரா நதி படுகையிலே 'அன்டர் கிரவுண்ட் வாட்டர்' என்று சொல்லப்படுகிற நிலத்தடி நீர் மிக அதிகமாக, அபரிமிதமாக இருக்கிறது. செங்கோட்டையிலும் அதற்குப் பக்கத்திலுள்ள தென்காசியிலேயும் குடிநீர்ப் பஞ்சம் இருக்கின்றது. ஆகவே நிலத்தடி நீரை உடனடியாக எடுப்பதில் ஏதோ பிராப்ளம் இருப்பதாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலிருந்து நிலத்தடி நீரை எடுப்பதிலே அரசுக்கு மாற்றுக் கருத்து இருப்பதாகத் தெரியவில்லை. அந்த ஹெட் ஒர்க்ஸ் அமைப்பதிலே ஏன் காலதாமதம் ஏற்படுகிறது? அதை உடனடியாக செய்து அந்தப் பகுதியிலே தட்டுப்பாடு மொத்தத்தையும் நீக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கோட்டை கடந்த சில மாதங்களாகவே வறட்சியாலே பாதிக்கப்பட்டு வருகிற ஒரு நகரம். அது நகராட்சியாக இருந்தாலும் அங்கே இருக்கின்ற ஹரிஹரா நதி ஜீவ நதி கூட அல்ல. அது குறுகலானதாக பெரும்பாறைகள் நிறைந்த இடத்தில் இருக்கின்றது. அந்த நதியிலே கலங்காத கண்டி அணைக் கட்டிலே 195 அடி நீளத்திற்கு சோதனை போட்டபோது மணல் தான் அதிகமாக இருக்கிறது. தண்ணீர் கிடைக்கவில்லை. மேலும் சில ஆராய்ச்சிகளைச் செய்ததில் களிமண் அதிகமாக இருப்பதாகத் தெரிய வருகிறது. ஆகவே இப்போது புதிய வழியைத்தான் கண்டுபிடிக்க வேண்டியதாக இருக்கிறது. செங்கோட்டை, தென்காசி மற்றும் வழியோரக் கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் திட்டத்தை அமல் நடத்தும் அளவுக்கு பணிகள் நடந்து வருகின்றன.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது கொடுக்கிற தகவலில் மணலும் களிமண்ணும் இருப்பது போன்ற கருத்தைச் சொன்னார்கள். ஆனால் அந்த ஹரிஹரா நதி படுகையிலே இருந்துதான் செங்கோட்டை ரயில்வே நிலையத்திற்கும், இப்போது புதிதாக வந்துள்ள திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினுடைய புதிய பணிமனைக்கும் தண்ணீரைப் பயன்படுத்துகின்றார்கள். அது ஜீவ நதியல்ல. அதிலே

தண்ணீர் இல்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அந்த ஆற்றுப் படுகையிலே அபரிமிதமான, அதிகமான தண்ணீர் இருக்கிறது. அந்த ரெயில்வே ஸ்டேஷனிலும், அதற்குப் பக்கத்தில் கிருஷ்ணாபுரம் போன்ற இடங்களிலும் அந்த ரெயில்வே ஸ்டேஷனில் வரும் தண்ணீரை, அந்த ஆற்றுப் படுகையிலிருந்து அங்கு வரும் தண்ணீரைத்தான் மக்கள் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே அதிலே தவறு இருந்தாலும்கூட, அந்தத் தவறுகளைத் திருத்திக் கொள்ளலாம். அங்கே ஏற்கெனவே அந்தத் தண்ணீரை எடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள். அங்கே நாம் புதிதாக ஏற்படுத்த வேண்டுமென்பதில்லை. அதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிப்பட்ட கவனத்தைச் செலுத்தி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி அந்த இடத்தை மீண்டும் பரிசோதனை செய்து அங்கே கிடைக்கின்ற தண்ணீரை செங்கோட்டை நகராட்சிக்கு வழங்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கோட்டை நகர மன்றத் தலைவர் அவர்கள் இதுபற்றி பலமுறை என்னை சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். இதற்காக தனியாக முயற்சி எடுத்து எப்படியும் அதிக தண்ணீர் தரவேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறேன். இருந்தாலும் இப்போது இருக்கின்ற நிலைமையில் 800 அடி உயரம் கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு கீழ் நீர் ஊற்று படுகையிலிருந்து எடுத்துச் சென்று தண்ணீர் வழங்கப்படுகிறது. இதன் மூலம் 10 லட்சம் லிட்டர் தண்ணீர் தரப்படுவதாகத் தெரிகிறது. ஆக நபர் ஒன்றுக்கு 32 லிட்டர் தண்ணீர்தான் வழங்கப்படுகிறது. எந்த வகையிலாவது அதிக தண்ணீர் கொடுப்பதற்கான வேலையை மேற்கொள்ள வேண்டுமென்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

காற்றாலை மூலம் மின் உற்பத்தி

392—(*வினா எண் 12111) திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காற்றாலை கொண்டு தனியார் மின் உற்பத்தி செய்துகொள்ள முன்வந்தால் அரசு தரும் மானியம் ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இல்லை.